பக்கங்கள் 4 விலை ரூபா 5/-

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

தீபம் 46 செப்ரெம்பர் 1997 ஒளி: 25

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு பல: நோ. கூட்டுறவு சங்கங்களினால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட சுத்தமான

★ நல்லெண்ணை ★

சங்கானை பல. நோ. கூ. சங்கத்தினால் தயாரிக்கப்பட்ட தரமான, ருசியான

★ அப்பளம் ★ ஆகியவற்றை

யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோ. கூ. சங்கக்கிளைகளில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

★ பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர்கள்

# நேரடியாகபங்கேற்கும்வகையில்சங்கதேர்தல் முறையில் மாற்றங்கள் செய்ய வேண்டும்!

## மாவட்ட அபிவிருத்திக்கு 'கிராமியவங்கிகளின்சமாசம்' அமைக்கப்படுவது அவசியம் - வட கிழக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

*"இன்றைய சூழ்நிலையில் அங்கத்தவர்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்குபற்றக்கூடிய வகையில் அதன் தேர்தல் முறையில் மாற்றம் ஏற்படுத்துவதுடன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளை உள்ளடக்கிய "கிராமிய வங்கிகளின் சமாசம்" உருவாக்கப்பட்டு அதன் மூலம் மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிக்கு கிராமியவங்கிகளின் சேமிப்புப் பணம் பயன்படுத்தப்படவேண்டும்"*

வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு க. சண்முகலிங்கம் ஐக்கிய தீபத்திற்கு அளித்த விசேட பேட்டியின் போது மேற்கண்டவாறுவலியுறுத்திக் கூறினார்.

ஆணையாளர் அப்பேட்டியின் போது கூறிய ஏனைய கருத்துக்கள் வருமாறு:

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில்அங்கத்தவர்கள் நேரடியாக பங்கு பற்றக் கூடிய வகையிலும்,நிர்வாகத்தினருக்கும் அங்கத்தவர்களுக்கு மிடையே புரிந்துணர்வின் அடிப்படையில் தொடர்புகளை ஏற்படுத்தும் வகையிலும் புதிய அமைப்பு முறை ஒன்றை அறிமுகப்படுத்தப்படுவது அவசியமாகிறது

இச்சங்கங்களின் தற்போதய அமைப்பு முறையில் அங்கத்தவர்களுக்குப் சங்க நிர்வாகத்திற்குமிடையே நீண்ட இடைவெளி காணப்படுவதால் அவர்கள் நேரடியாக சங்க நடவடிக்கைகளில் பங்குபற்றக் கூடிய வகையில் நெறியாளர்களை பிரதிநிதிகள் நேரடியாகத் தெரிவுசெய்யப்படுவதற்கேற்ற வகையில் கிளைக்குழுத் தேர்தல்முறையில் மாற்றங்கள் கொண்டு வரப்படுவது விரும்பத்தக்கதாகும்

இடம் பெயர்ந்த நிலையில் தீவுப்பகுதியில் குறைந்த அளவு எண்ணிக்கையிலான குடும்பவுகள் மீளக் குடியமர்ந்திருப்பதினால் அங்குள்ள அங்கத்தவர்

4ம் பக்கம் பார்க்க

## சங்கத்தலைவர்கள் ஆணையாளர் சந்திப்பு

வட கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் தனது யாழ், மாவட்ட விஜயத்தின் போது கூட்டுறவு நிறுவனங்களின் பல்வேறு அமைப்புக்களையும் சந்தித்துகலந்துரையாடினார்,

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையில் இடம் பெற்ற இச் சந்திப்பில் பல நோ. கூ சங்கங்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுவுச் சங்கம், யாழ். மாவட்ட சி. க. கூ. சங்கங்கள் சமாசம் ஆகியவற்றின்பொதுமுகாமையாளர்கள் தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச்சங்க சமாசத்தில் அதன் அங்கத்துவ சங்கத்தலைவர்களையும், வட மாகாண தெங்குபனம்பொருள் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் ப. தெ. வ. அ. கூட்டுறவுச் சங்கத்தலைவர்கள், பொது முகாமையாளர்கள் கொத்தணி தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்

## கணக்காய்வுகுழு நியமனம்

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் நிலுவையாக இருக்கும் கணக்காய்வுகளை மேற்கொள்ள கணக்காய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் கூ. அ உ ஆணையாளர்கள திரு எஸ். கே.சண்முகநாதன் (அபிவிருத்தி) திரு கா. பரநிருபசிங்கம் (ப/தெ/வளம்) திருமதி கோ. திருநாவுக்கரசு (எண்பார்வை திரு. பெ. கனகசபாபதி (தலைவர் யா. மா. கூ. சபை) திரு ச. முருகநேசன் (தலைவர் சி. க. கூ. ச. சமாசம்) திரு. சா. செல்வரத்தினம் (தலைவர் வ. மா. ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்) திரு. சி குமரவேல் (உபதலைவர் யா. மா. வி. உ. நு. ச. கூ. ச. சமாசம்) திரு.சி. சிவமகாராசா (தலைவர் தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கம்) திரு. வி. சேதுநாயகம் (தலைவர் பருத்தித்துறை ப. நோ. கூ, சங்கம். ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## விவசாய உற்பத்திகளை கப்பல் மூலம் அனுப்ப அரச அதிபர் நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும், விவசாய உற்பத்திப் பொருட்களை கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரச அதிபர் தலைமையில் ஒருகுழு நியமிக்கப்பட்டுள்ளது இக்குழுவில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், விவசாயப் பணிப்பாளர், கமத்தொழில் சேவைகள் உதவி ஆணையாளர் யாழ். மாவட்ட விவசாய சமாசத் தலைவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.



சுன்னாகம் ப. தெ. வ. அ. கூ. சங்க வெள்ளி]' விழாவை சங்கத்தலைவர் திரு தே. மதுரநாயகம் தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு சோ. குமாரவேலு ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதை முதலாவது படத்திலும் வெள்ளி விழா ஐக்கிய தீப அனுபந்த மலரை சங்கத்தலைவர் வெளியிட தெல்லிப்பழை ப நோ கூ சங்க தலைவர் எஸ், சிவமகாராசா அவரின் பிரதியை பெறுவதை இரண்டாவது படத்திலும் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு மா சின்னத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவதை மூன்றாவது படத்திலும் காணலாம். படத்தில் கூ. அ உ ஆணையாளர் திரு எஸ். கே, சண்முகநாதன் கூட்டுறவு சபைத்தலைவர் திரு பெ. கனகசபாபதி சங்கப் பொதுமுகாமையாளர் திரு ஜே பி குணரத்தினம் சங்க உபதலைவர் திரு சு. பொன்னுத்துரை ஆகியோரும் காணப்படுகிறார்கள்.

## நியமன மாற்றம்

வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (நிருவாகம்) கடமை ஆற்றிய திரு. எஸ். லிங்கநாதன் திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பான உதவி ஆணையாளராக, நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் [redacted] செயற்பாடுகளுக்கு பொறுப்பாளராக ருந்த கூ. அ. உ. ஆணையாளர் திரு. எம். லோகநாயகம் நிருவாகப் பகுதிக்கான உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நிதி உதவி

வன்செயலுக்கு உட்பட்டு மரணமடைந்த நெடுந்தீவு ப, நோ. கூ, சங்க காவலர் நாகலிங்கம் ஆறுமுகம் குடும்பத்தினருக்கு நிதியுதவி செய்யுமுகமாக நிதி உதவி கோரி வடபகுதி பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு நெடுந்தீவு பலநோ. கூ. சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

★ கூட்டுறவே நாட்டுயர்வு ★

# கூட்டுறவுசேவையாளர்கள் "சரண்டலில்" ஈடுபடாது செயலாற்றவேண்டும்

**பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கத்தில் இளைய தலைமுறையின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ள சங்கத்தின் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பல்வேறு அமைப்புக்களில் தலைமைத்துவம் பெற்றுள்ள திரு. ந. கணேசன் அவர்களினதும் நேர்காணல் இங்கு பிரசுரமாகியுள்ளது.**



கேள்வி; கூட்டுறவு சங்கங்களுடானான ஈடுபாடு உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

பதில்: எனது தகப்பனார் (சண்முகம் சின்னத்துரை) ஒரு கூட்டுறவாளனாக இருந்தபடியால் 1971ம் ஆண்டுக்கு முன்பே வண்ணான் கேணி தம்பகாமம் கூட்டுறவுச் சங்கத்தைஉருவாக்கிஅதன் தலைவராக இருந்து வந்தார். 1965ல் நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்றபோது அமரர் வ. பொன்னம்பலம் ஆங்கிலபாடம் கற்பிப்பார். அப்போது அவர் இடைஇடையே "கூட்டுறவு" சம்பந்தமான விளக்கங்களை எங்களுக்குக் கூறுவார் அப்போது அவரின் விளக்கங்களை என்னால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது.

1981ல் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராகவும் 1990 சங்கத்தின் உப தலைவராகவும், 1996ல் இருந்து இன்று வரை தலைவராகவும், யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் வந்த போதுதான் அமரர் வ. பொன்னம்பலம் அன்று கூறியவற்றின் உண்மைத் தன்மையை இன்று என்னால் உணர முடிகிறது.

கேள்வி: கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் பணியாளர்களது பங்களிப்பு எத்தகையதாக இருக்க வேண்டுமென்று கருதுகிறீர்கள்?

பதில்: பணியாளர்களைப் பொறுத்தவரை தாங்கள் வேலை செய்யும் சங்கங்களை தங்களது சங்கங்களாகக் கருத வேண்டும் சேவை மனப்பான்மையுடனும், கடமையுணர்வோடும் பணியாளர்கள் பணியாற்ற வேண்டும் பணியாளர்கள் மனம் கோணாது, அவர்களை வஞ்சிக்காது, பழிவாங்காது அவர்களுக்குரிய கொடுப்பனவுகளை பாரபட்சமின்றி வழங்கி ஊக்குவிக்க வேண்டும், கூட்டுறவுச்சங்கப் பணியாளர்கள் தற்போது பெறும் சம்பள அளவுகள் அவர்களுக்குதிருப்தி அளிக்கக் கூடியதாக அமையவில்லை எனவே சம்பள அளவுகளை மீளாய்வு செய்து அவர்களுக்கு திருப்தி அளிக்கக் கூடியதான சம்பளத் திட்டம் ஒன்றை உருவாக்குவதில் வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கவனம் செலுத்த வேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் அவரைக்கேட்டுக்கொள்கிறேன்.

கேள்வி கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், எப்படி இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்: கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், கூட்டுறவுக்கோட்பாடுகள், கூட்டுறவுச் சட்டம், கணக்குவைப்பு முறைகள், சங்க முகாமைத்துவம் ஆகிய வற்றை நன்கு அறிந்து சங்கத்தை திறமையாக வழி நடாத்துபவர்களாக இருக்க வேண்டுமேயொழிய வழி நடத்தப்படுபவர்களாக இருக்கக் கூடாது.

கேள்வி; சங்கம் தொழில் முயற்சியில் ஈடுபடக்கூடிய வகையில் திட்டங்கள் ஏதும் உண்டா?

பதில்; எமது பிரதேசத்தில் தேங்காய் பெருமளவு கிடைக்க கூடியதாகயிருப்பதால் அதனை மூலப்பொருளாகக் கொண்டு தேங்காய்எண்ணைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம் சுமார் 25 லட்ச ரூபா முதலீட்டுடன் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இத் தொழிற்சாலைக்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் தட்ட உதவியையும் நாடியுள்ளோம், இம் முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணையை ஏனைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்யக் கூடியதாகஇருக்கும்.

கேள்வி; யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராக உம் இருப்பதால் அதன்செயற்பாடுகள் பற்றிக் கூறுவீர்களா?

பதில்: இச் சமாசத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்துவம் பெற்றுள்ளன. கடந்த காலங்களில் கொழும்பில இருந்து பொருட்களைக் கொள்வனவு செய்து கப்பல் மூலம் கொண்டு வந்து சங்கங்களுக்கு விநியோகம் செய்தது போல் தொடர்ந்தும் அதே செயற்பாட்டினைச் செய்து வருகிறது. இதற்கு அங்கத்துவ சங்கங்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பை தொடர்ந்தும் வழங்கி வர வேண்டும்.

நுகர்ச்சிப் பொருட்களை சமாசம் கொள்வனவு செய்து சங்கங்களுக்கு விநியோகிப்பதால் சங்கங்கள் பல பிரச்சனைகளை தவிர்த்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கூட்டுறவு நிறுவனங்களது வாகனங்களை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்தங்கள் செய்து கொடுக்கக் கூடியதான "வாகனத் திருத்தகம்" ஒன்றை [GARAGE] ஆரம்பிப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளோம்.

வாகனத்திருத்தகம் ஒன்று அமைக்கப்படுவதன் மூலம் சங்கங்கள் சிறந்த சேவையைப் பெறுவதுடன் வாகனப் பகுதியை இலாபகரமாக இயங்க வைக்கமுடியும். இதன் மூலம வாகனப் பகுதியில எழக்கூடிய பல பிரச்சனைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்,

கேள்வி; சமாசத்தின் செயற்பாடுகளில் இருந்து சங்கங்கள் எத்தகைய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்?

பதில்! நுகர்ச்சிப்பொருள் கொள்வனவுக்கென சமாசம் ஒரு மத்திய நிலையமாக இருக்கும் போது, சங்கங்கள் தனித்தனியே கொள்வனவு செய்வது தவிர்க்கப்படலாம். சங்கங்கள் ஒவ்வொன்றிலும் கொள்வனவு உத்தியோகஸ்தர்கள் இருக்கும்போது அவர்கள் மூலம் கொள்வனவு செய்வதைத்தவிர்த்து சங்கத்தலைவர்கள் தாமாகவே நேரில் சென்று கொள்வனவு செய்து வருவதைக் காணமுடிகிறது இதனைத்தலைவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் குறிப்பிட்டுச் சொல்வதாயின் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளையும், வேலைகளையும், சட்டம், ஒழுங்கு விதிமுறைகளுக் கேற்பசெய்துவரின் எதிலும் எந்தப் பிரச்சனைகளும் எழமாட்டாது,

அத்துடன் தனியாருடன் போட்டியிட்டு தரமான பொருட்களை மலிவானவிலையில் வழங்கக் கூடியதாகவும் இருக்கும்

கேள்வி; எது எப்படி இருப்பினும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விலைகளுக்கும் தனியார்வர்த்தகரின் விலைகளுக்குமிடையே விலை வித்தியாசம் நிலவுவதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

தனியார் வர்த்தர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் இடையே பொருட்களின் விலை, தரம், சம்பந்தமாக வித்தியாசம் இருப்பதும் உண்மைதான் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்ணயிக்கும் விலை தான் தனியார் விலைநிர்ணயத்தைக் கட்டுப்படுத்துகிறது. உதாரணமாக பச்சிலைப்பள்ளிப. நோ. கூ.சங்கம் ஒரு பை சீமெந்தை 650/- வாக விற்பனை செய்த போது தனியார் 625/- வாக விற்பனை செய்தார்கள் சங்கம் உடனடியாக அதன் விலையை 550/- குறைவாகக் குறைத்த

[4 ம் பக்கம் பார்க்க]

# பனை, தென்னை, வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களின் கல்வியிலும், கிராமிய அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்த வேண்டும்.



கேள்வி; கூட்டுறவில் உங்களுக்கேற்பட்ட ஈடுபாடு பற்றிக் கூறுகிறீர்களா?

பதில்; 1980ம் ஆண்டு தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கத்தில் அங்கத்தவராகி 1988ல் அதன் நிர்வாகசபை உறுப்பினராக இருந்து 1992ல் சங்கத்தின் தலைவராக வந்தேன் 1991ல் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்கொத்தணியின் நிர்வாக சபை உறுப்பினராக இருந்து 1995 முதல் இன்றுவரை அதன் தலைவராகவும், யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உபதலைவராகவும், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் செயலாளராகவும் இருந்து வருகிறேன்.

கேள்வி; பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பதவி வகித்து வரும் நீங்கள் அவற்றின்மூலம் எத்தகைய சேவைகளை செய்து வருகிறீர்கள்?

பதில்: கூட்டுறவு அமைப்புக்களின் மூலம் சேவை செய்வது மிகவும் கடினமானது. எந்தவொரு விடயத்திலும் தன்னிச்சையாக செயற்படாமல் முகாமைத்துவத்தினதும் திணைக்களத்தினதும், துறைசார் நிபுணர்களினதும் ஆலோசனையுடனும், பணியாளர்களது ஒத்துழைப்புடனும் செயல்பட்டுவருவதனால் எதுவித கஷ்டமுமின்றி செயல்பட முடிகிறது. தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுப் பொதுமுகாமையாளர் திரு. கா. சிவஞானம், வலிகாமம், கொத்தணியின் முன்னாள் பொது முகாமையாளர் அமரர் திரு. கா. சந்திரராசா ஆகியோர் எனக்கு உறுதுணையாக இருந்து வந்தார்கள். தெல்லிப்பழை ப.தெ.வள. அ. கூசங்கம் இடம்பெயர்ந்தநிலையில் அதன் 1300 அங்கத்தவர்களில் இப்போது250 அங்கத்தவர்களில்மட்டுமே தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

தொழிலாளர்களுக்கான காப்புறுதிதிட்டம், இலவச திருமணப்பதவு, இடம்பெயர்ந்தகாலங்களில் அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கு நிவாரணப் பொருட்கள், பண உதவிகளும் கொத்தணி மட்டத்தில அங்கத்தவர்களுக்கு கிணறுகள் வீடுகள அமைத்துக்கொடுத்தலும யாழ். மாவட்ட கூட்டுறவுசபையின் அனுசரணையுடன மகளிர் பயிற்சிகள, அங்கத்தவர்களுக்கான தொடர்பயிற்சி கருத்தரங்குகள் நடாத்திவந்தோம.

கேள்வி; வலிகாமம் கொத்தணியின் தலைவர் என்ற முறையில் அதன் எதிர்காலத் திட்டங்கள பற்றிக் கூறுகிறீர்களா?

பதில்; வலிகாமம் கொத்தணியை உருவாக்கிய திருவாளர்கள் சு. நடேசு. ஐ. சி. கந்தசாமி, சி. அன்னலிங்கம், சி. கந்தசாமி ஆகிய தலைவர்கள் விட்டுச்சென்ற சேவைகளை நாம் தொடர்ந்து செய்துவருகிறோம்.

வலிகாமம் கொத்தணியினால் இயக்கப்பட்டுவரும் வடிசாலைக்கான அங்கிகாரம் பெறுவதற்கான முயற்சியில் இறங்கிஉள்ளோம், அனுமதி கிடைக்கும் பட்சத்தில் அதன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து, சட்டவிரோத நடவடிக்கைகளை ஓரளவுக்கு கட்டுப்படுத்தலாம் என்ற நம்பிக்கை உண்டு.

கேள்வி; சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் சித்தவைத்தியத்துறை மூலம் நீங்கள் ஆற்றிவரும்சேவைகள் என்ன?

பதில்: சித்தவைத்தியத்திற்கான மூலிகைத்தோட்டம் ஒன்று இணுவிலில் ஆரம்பிக்க நடவடிகளை எடுத்துளளோம். எமது சங்கத்தில் தயாரிக்கப் படும் மூலிகை மருந்துவகைகளை பிரதேச சபைகளின் கீழ் இயங்கிவரும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு வழங்கி வருகிறோம். சித்த வைத்திய கூட்டுறவுச்சங்கத்தில் பயிற்சி பெற்ற சுகாதாரத் தொண்டர்கள், மருந்துக்கலவையாளர்கள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம் இத்தகைய திட்டங்களுக்கு வைத்திய கலாநிதி க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆலோசனைகளைப் பெற்று வருகிறோம்.

**நேர்காணல் - நக்கீரன்**

கடந்த காலங்களின் ப. தெ. வ. அ. கூ. சங்கங்கள் தங்கள், தங்கள் பகுதிகளில் இலவச சித்தவைத்திய சேவைகளை மக்களுக்கு அளித்து சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்கள்.

கேள்வி; பல்வேறு கூட்டுறவு அமைப்புக்களில தலைமைத்துவப்பொறுப்பினை ஏற்றிருக்கும் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவ வாயிலாக கூட்டுறவாளர்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்; புனிதமான கூட்டுறவு இயக்கத்தில் இணைந்து சேவை செய்பவர்கள் மத்தியில் போட்டி நிலவினாலும் அது பொறாமையாக மாறக் கூடாது. கூட்டுறவு நிறுவனங்களின் வெற்றிகரமான செயற்பாடுகளுக்கு "ஒற்றுமை" அவசியமாகும். இத்தகைய ஒற்றுமை பணியாளர்கள், அங்கத்தவர்கள் நிர்வாகிகள் மட்டத்தில் நிலவ வேண்டும். பணியாளர்களின்கொடுப்பனவுகள் ஊக்குவிப்புகள் பாகுபாடு இன்றி ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியிலும் கிராமிய அபிவிருத்தியிலும்

[4ம் பக்கம் பார்க்க]

சிந்தனைச் சுடர்.

அவரவர் கடமையை அவரவருக்கு விதித்தபடி செய்து வருவதே நலம்.

- மகான்

## ஐக்கிய எண்ணம்

### கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவு சம்மந்தமான விழிப்புணர்வையும், எழுச்சியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தி கூட்டுறவு நிறுவனங்களின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டுறவுக்கல்வி அவசியமாகும்.

கூட்டுறவு அமைப்பின் புனிதத்தன்மை, அதன் கொள்கைகள் ஜனனாயகப் பண்புகள், அங்கத்தவர்களின் பங்களிப்பு என்பன போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய கூட்டுறவுக் கல்வி வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் கூட்டுறவுக் கல்வியை நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

இத்தகைய கல்வித்திட்ட நடவடிக்கைகளை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கூட்டுறவு சபை கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தி வந்தது. தற்போதய உடனடித் தேவைகள் சிலவற்றை எதிர் கொள்வதற்கேற்ற வகையில் வட கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இத்திட்டத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளார். புதிய மாற்றங்களின் பயனாக பாரிய கூட்டுறவுச் சங்கங்களான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதுடன், சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை கிராமிய மட்டத்தில் புதிய உத்வேகத்துடன இயங்க வைபபதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதொன்றாகும்.

கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களின கல்வியைப பொறுத்தமட்டில அவர்கள் தான் கூட்டுறவுச சங்கங்களின் உடமையாளர்கள'' என்பதை அவர்களுக்கு உணர்த்தும வகையிலும, சங்கங்களின் செயறபாடுகளோடு தொடர்புடைய முக்கிய படிவங்கள் பற்றிய அறிவையும புகட்டுதல் அவசிய மாகும.

பணியாளர்களுக்கான கல்வியைப் பொறுததமட்டில் அவர்களுடைய கடமைகளுடன் தொடர்புடைய படிவங்கள், கூட்டுறவு, வர்த்தக நடவடிக்கைகள சம்பந்தமான பரந்துபட்ட அறிவு, அங்கத்தவர்கள் பொதுமக்களுடனான தொடர்புகள் போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் இக்கல்வி பரப்பப்பட்டு அவர்கள் எதிர்காலத்தில் சமூகப் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும், நல்ல கூட்டுறவுப் பண்புகள் கொண்ட தலைவர்களாகவும் உருவாக்கப்பட வேண்டும்.

இவற்றை அடிப்படையாக வைத்து யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கல்வித் திட்டம் ஒன்றை தயாரித்து நடைமுறைப்படுத்தி வருவதுடன் கூட்டுறவு சங்கங்களின் நடவடிக்கைகளில் மகளிரின் பங்குபற்றக்கூடிய வகையில் மாவட்ட மகளிர் குழு அமைத்து அதன் மூலம் இன்றைய சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்கு வருமானத்தைக் கொடுக்கக்கூடிய தொழில துறைகளில பயிற்சிகள் வழங்கி தராதரப் பத்திரங்களும் வழங்கி வருகிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவு சபை நடாததிவரும் கூட்டுறவுக் கலூரியில உயர் பிரிவு, சாதாரண பிரிவு, கனிஷ்ட பிரிவு பயிற்சிகளை சஙகபபணியாளாகளுககும், வெளிவாரிமாணவாகளுககும பல சிரமங்களின மதத்யில் நடாத்தப்பட்டு வருவது முககிய அமசமாகும.

யாழ். மாவட்டகூட்டுறவு சபைவட-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன்பலசிரமங்களின் மத்தியில இததகைய கூட்டுறவு கல்வி வேலைத்திட்டத்தை கூட்டுறவு நிறுவனங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கூட்டுறவு சபையின் கூட்டுறவு கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவர்களின் கடமைப்பணியாகும்.

''கூட்டுறவே நாட்டுயர்வு''

# ப. தெ. வள அபிவிருத்தியில் கவனம் செலுத்தவேண்டும்

சுன்னாகம் பனை, தென்னை, வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாவில் யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் திரு. எம். சின்னத்தம்பி வெள்ளி விழா மலரை வெளியிட்டு ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் இங்கு பிரசுரமாகியுள்ளது,

பனை, தென்னை,தொடர்பான விஞ்ஞான பூர்வமான மாதிரிப் பண்ணைகள் உருவாக்கப்பட்டு, இவை தொடர்பான நோய்கள் குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்குரிய வழிவகைகளில் தொடர்ச்சியாக கவனம் செலுத்த வேண்டும்.

மிக நவீனமயமாக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடம மத்திய நிலையில் உருவாக்கப்பட்டு பனை, தென்னை, வள அபிவிருத்தி தொடர்பாக மட்டுமன்றி இவற்றின் உற்பத்திகளை முன்வேற்றுவதிலும் விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி, அபிவிருத்தி முயற்சிகளில் மிகக்கூடிய அக்கறை செலுத்தப்படல் அவசியம்.

பனை, தென்னை, வளங்களின் உற்பத்திகளை சந்தைப் படுத்துவதில் நவீன உபாயங்கள் கையாளப்படல் வேண்டும். தகைமைகூடிய சந்தைப் படுத்தற்துறைசார் நிபுணர்களை அமர்த்தி கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப் படுத்தும் மாதிரியில் விற்பதற்கு கூடிய கவனம் செலுத்துதல் அவசியம் சந்தைப்படுத்தல் நெறிமுறைகளைப் பின்பற்றாத விடத்து தனது உற்பத்திகளை இலாபகரமான முறையில் சந்தைப்படுத்துவதோ இத்துறையில் தங்கியிருப்போரில் வாழ்க்கைத். தரத்தை உயர்த்துவதோ நடைமுறை சாத்தியமாகாது

இத்துறையின் அபிவிருத்தியென்பது இத்துறையில் தங்கியுள்ள தொழிலாளர் சமூகத்தின் முன்னேற்றம் பற்றி தெளிவான செயற்திட்டங்களை வடிவமைத்தலிலேயே பெரிதும் தங்கியுள்ளது தொழிலாளரிடம் மனித வள அபிவிருத்திக்கான நீண்டகால திட்டங்களையும், அவற்றுக்கு அமைவான குறுங்கால செயற்திட்டங்களையும் அறிமுகப்படுத்த வேண்டும்,

தொழிலாளரின் கல்வி, ஊட்டம், சுகாதாரம், நலத்துறை மேம்பாடு, குடிநீர் வசதி சுகாதாரமான வசிப்பிடம் என்பவற்றில் மிகவும் அக்கறை மிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டும் செயற்திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

தொழிலாளரின் தொழில்சார் அறிவு, திறன்கள், மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தும் வகையில் தொடர் கருத்தரங்குகள், பயிலரங்குகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும தொழில் சார்ந்து உயரிய மனப்பாங்கு பொறுப்புடைமை, சிக்கனம் கணக்கு வைக்கும் பழக்கம் என்பவற்றை விருத்தியடையச் செய்தல் அவசியம்

நீண்டகாலத்தில் தேசிய, கல்வி நிறுவனங்களின் திட்டத்திலும் உயர் கல்வி கற்கை நெறியிலும் பனை, தென்னை வளம் சார்ந்த சிறப்புக் கலைத்திட்ட ஏற்பாடுகளிலும் கவனம் செலுத்தலாம். காலக்கிரமத்தில் தனிப் பீடமாக முன்னேற்றுவதன் மூலமாக இத்துறை தேசிய முன்னணித் துறைகளில் ஒன்றாக வளர்த்தெடுக்கப்பட முடியும்.

எதிர்காலத்தில் தொடர்ந்து பனை, தென்னை, வளத்துறை வறியவர்களின் துறையாகவும் நலிவுற்றோருக்குரிய துறையாகவும், கிராமியத் துறை பண்பு நிலைக்குட்பட்டதாகவும் நீடித்திருத்தல் கூடாது.

தேசிய ரீதியில் இத்துறை வளர்வதற்கும் இத்துறை சார்ந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ தொழில் வாய்ப்புப் பெறும் மக்கட் தொகுதியின் சமூக பொருளாதார முன்னேற்றங்களை உறுதிப் படுத்திக்கொள்வதற்கும் இத்துறை சார்ந்த நிறுவனங்களும் சமூக வியலாளரும், பொருளியலாளரும், கல்வியியலாளரும், அரசியலாளரும் கவனம் செலுத்தி செயற்பாடுகளிலும் ஈடுபடுதலவசியம்,

# ஐக்கியம் ஒரு ஆதார சுருதி

திருகோணமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நகரின் கேந்திர நிலையத்தில் அமைத்துள்ள இரு மாடிக்கட்டிடத் தொகுதியின் திறப்பு விழா இம் மாதம் நடைபெறவிருப்பதை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

கூட்டுறவு என்பது ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் உழைக்கும் பொருட்டு மக்களின் பொருளாதார சமூக கலாச்சார முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உருவாக்கப்பட்ட உன்னதமான ஒரு அமைப்பாகும். இவ் அமைப்பிற்கு அடித்தளமாக இருப்பது ஐக்கியமாகும்

ஐக்கியம் நிலவுகின்ற கூட்டுறவுச் சங்கமொன்றின் கட்டமைப்பு பின்வருமாறு அமைய வேண்டும்,

- ★ சங்க உறுப்பினர்களிடையே ஐக்கியம்.
- ★ பொதுச்சபைஉறுப்பினர்களிடையே ஐக்கியம்.
- ★ இயக்குனர் சபையில் ஐக்கியம்
- ★ பணியாளர்களிடையே ஐக்கியம்.
- ★ அவ்வனைத்துத்தரப்பினரிடையே ஐக்கியம

இததகைய ஐக்கியம நிலவுகின்ற ஒரு கூட்டுறவு நிறுவனமாக திருகோணமல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் விளங்கி வருவதால் அண்மையில் கூட்டுறவுச் சங்கங்களிடையே நடாத்தப் பட்ட போட்டியில் முதலாம் இடத்தையும் சிறந்த பொதுமுகாமையாளருக்குமான விருதினை சங்கம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

ஐக்கியத்தின் பரந்து பட்ட தன்மையை சங்கம் கைவிட்ட ஒரு கால கட்டத்தில் சங்கம் கலைக்கப்படக் கூடிய ஒரு நிலையில் '' ஊழியர் ஒன்றியம் '' என்ற பணியாளர் அமைப்பின் மூலம் சங்கத்தின் முன்னேற்றத்திற்கு அரும்பணியாற்றி அகால மரணத்தைத் தழுவிய முன்னாள் பொது முகாமையாளர் திரு செ சண்முகசுந்தரத்தின் அயராத உழைப்பினால் ஆற்றல், அனுபவம், துணிவு, நல்நோக்கம் கொண்ட ஒரு இயக்குனர்சபை அமைய வழி வகுத்தார்

மக்களுக்குரிய அத்தியாவசிய நுகர்பொருள் விநியோகத்தை மொத்த சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் சங்கம் மேற் கொண்டு வருவதுடன் எரிபொருள், புடவை, இரும்பு விற்பனை நிலையங்களும், கோழிப் பண்ணை, மரண சாதன வாகன சேவை, ஒட்டோ சேவை, புத்தக விற்பனை நிலையம மாதிரிகுளிர்பானவிற்பனை நிலையம் என பல்வேறு சேவைகளை சங்கத்தின் எல்

4-ம் பக்கம் பார்க்க



அடிமையை விரட்ட வேண்டி
ஆயிரம் நீதி சொன்னாய்
கொடுமையைக் கொல்ல வேண்டி
கோன்முறை வகுத்து வைத்தாய்
மடமையை கொளுத்தச் சொல்லி
மகளிரை வாழ வைத்தாய்
விடுதலை பெற்றே வாழும்
வேட்கையை ஊட்டி வைத்தாய்

மகாகவி பாரதியாரின் நினைவு தினம் இம் மாதம் 11-ம் திகதியாகும் அதனையொட்டி இக்கவிதை பிரசுரிக்கப் பட்டுள்ளது.

### கூட்டுறவு சேவையாளன்



கூட்டுறவுத் திணைக்களத்தின் மூலம் கூட்டுறவுச் சேவையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவர்களுள் திரு. சிற்றம்பலம் சந்தரனும் ஒருவராவர். அவர் தன்னிடமுள்ள திறமையினாலும, கூர்மையான அறிவினாலும் மதிநுட்பத்தினாலும தனதுசேவை காலத்தில் கணக்காய்வுப் பகுதியில்தனக்கென தனியானஒரு இடத்தைப் பெற்றுள்ளார்.

''சந்திரன்'' என்ற பெயருக்கேற்ப மலர்ந்த முகத்துடன் வேடிக்கையான, விளையாட்டான கதைகளுடன் சங்கப் பணியாளர்களை நட்புத்தன்மையுடனும் தனது கணக்காய்வு வேலைகளைச் செய்விக்கும் ஆற்றல் படைத்தவர்.

கடமை, கண்ணியம, கட்டுப்பாட்டுடன தனது கடமைகளை திறமபட ஆறறி வந்த இவர் இவ்வுலக வாழ்க்கையை விட்டுப பிரிவதறகு ஒருவாரத்திற்குமுன், வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. சங்கங்களின் கொத்தணியினதும தொலபுரம, மூளாய் பரஸ்பர ஐக்கிய சங்கத்தினதும கணக்காய்வுஅறிக்கைகளை சமர்பபிததுடன் அடுத்த கணக்காய்வு அறிக்கைகளையும் விரைவில் முடித்துத் தருவன் என்று கூறியமை இன்றும் எமது நினைவில் நிழலாடுகிறது.

மானிப்பாய், பண்டத்தரிப்பு, சுழிபுரம், காரைநகர் சங்கானை ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் சிறந்த வழிகாட்டியாக இருந்து ஆலோசனைகள் வழங்கி சேவை ஆற்றி அந்நிறுவனங்களைநல்ல நிலைக்குக் கொண்டுவந்த பெருமையும இவரையேசாரும்

முப்பது ஆண்டுகால கூட்டுறவு சேவையாளரை சிறந்த கணக்காய்வாளரை நாம் இழந்துள்ளோம்.பதவி உயர்வுடன், சேவை நீடிப்பும் பெற்றபோது அப்பதவியில் அவரை நிலை

[4-ம்பக்கம் பார்க்க]

Regitsered as a News Paper at the G. P. O.
Sri Lanka. Under No. K J V 59/87

ஐக்கிய தீபம் AIKIYATHEEPAM செப்ரெம்பர் 1997

# ஆலையடிவேம்பு "மகாசக்தி" சி.க.கூ.சங்கம்

'உறவுக்கு' கைகொடு பகைமைக்கு விடைகொடு'' என்பதை தனது தாரக மந்திரமாக கொண்டு மகளிர் சக்திகளின் ஒன்றிணைப்பால் அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் ஆலையடி வேம்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட,ஆதரவற்ற,தொழில்வளம் குன்றி, வருவாய் இழந்து வாழ்ந்த மக்களுக்காக அவர்களின் தேவைகளுக்காக 1992ம் ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வயதில் குறைந்த மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் சிறந்த ஒரு சமூக சேவை நிறுவனமாக செயலில் உயர்ந்து நிற்கிறது

95% பெண்களை உறுப்பினராக கொண்ட (இது வரை 1959 உறுப்பினர்களை கொண்டது) இம்மகாசக்தி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம் 20 கிளைச்சக்திகளைக் கொண்டு இயங்குகின்றது. இச்சங்கத்தின் நோக்கங்களாவன

1. சேமிப்பு - சிக்கனம்
2. சுயதொழில் கடன் வழங்குதல்
3. ஏழைகளின் வருவாயைப் பெருக்குதல்
4. வறுமையை விரட்டுதல்
5. உள்ளூர் வளங்களைப் பயன்படுத்துதல்
6. மனிதவளங்களைப் பயன்படுத்துதல்
7. பெண்களை விழிப்புறச் செய்தல்
8. பெண்கள் தலைமைத்துவம் ஏற்படுத்தல்
9. ஆண், பெண் சமத்துவ மேம்பாடு
10. சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல்
11. கல்வி, கலை, கலாச்சார சுகாதார அபிவிருத்திக்கு உதவுதல்
12. ஐக்கியம், நாணயத்தின் மூலம் கூட்டுறவை வளர்த்தல்

இச்சங்கம் தனது குறுகிய கால வரலாற்றில் பல்வேறு சாதனைகளை புரிந்துள்ளது சமூக சேவை திணைக்களத்திலும் தன்னை பதிவு செய்து கொண்ட இச்சங்கமானது அதன் செயற்பாட்டு சிறப்பால் பல்வேறு உதவும் நிறுவனங்களான ''வூஸ் சிடீ'' ''நொறாட் டயகோணியா'' போன்றவற்றிடம் இருந்து பெருந்தொகையான நிதியுதவியை பெற்றுள்ளது.

இச்சங்கம் 1992 முதல் வைகாசி 1997 வரை ரூபா 161,16388ஐபல்வேறுதிட்டங்களுக்காக கடனாகவழங்கியுள்ளது, இச்சங்கத்தில் சேமிப்பாக சுமார் 31 லட்சம் காணப்படுகிறது வாடகை கட்டிடத்தில் இயங்கிய இச்சங்கம் 1996 பங்குனி முதல் தனக்கென ஒருபணிமனை அமைத்து செயல்படுகிறது.

இச்சங்கம் தற்போது பாலர் பாடசாலைகளையும் மகளிர்களுக்கான தையல் நிலையங்களையும் அமைத்து செயல்படுத்திவரும் அதேவேளை 1997ம் ஆண்டு நடைமுறைப் படுத்த பின்வரும் நடவடிக்கைகளை இனம்கண்டுள்ளது.

★ தையல் நிலையத்தை நவீனமயப்படுத்தல்

★ பாலர் பாடசாலைகளுக்கு பூங்காக்களை அமைத்தல்

★ பணியாளர்களுக்கு சீருடை வழங்கல்

★ உழவு இயந்திரம், பாணிகள் வாகனம் (வான்) கொள்வனவு செய்து பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுதல்

★ ஆயுட்கால காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகம் செய்து உறுப்பினர் பயன் பெறச் செய்தல்

மகாசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் செயல்பாடுகள் வியக்கத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளதோடு வெளிநாடுகளின் நிதியுதவிகளை பெறக்கூடிய அளவிற்கு அரசசார்பற்ற நிறுவனங்களை பெறக்கூடியதாக செயலாற்றி அவற்றின் உதவிகளுடன் வேகமாக வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

திருமதி வே செல்வரத்தினம்
(யாழ். மா. கூ. சபை மகளிர் விவகாரஉத்யோகத்தர்)

# புதிய கிளைக்குழு தேர்தல் விதிகள்

அக்கரைப்பற்று தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க உபவிதியின் 28ம் பிரிவின் கீழ் வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தனது அதிகாரத்தைக் கொண்டு 1977ம் ஆண்டின் டிசம்பர் 28ம் திகதிய 297 / 7 ஆம் இலக்க அரச அதிவிஷேஷ வர்த்தக மானியில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்ககிளைக்குழுத் தேர்தல் விதிகளை ரத்துச் செய்து 1997ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 25ம் திகதிய 972 / 13 ஆம் இலக்க அரச அதிவிஷேஷ வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப்படுத்தப்பட்ட புதிய கிளைக்குழுத் தேர்தல் விதிகள் இங்கு பிரசுரிக்கப் பட்டுள்ளது.

1. சுருக்கப்பெயர்-இவ்விதிகள் வரையறுக்கப்பட்ட அக்கரைப்பற்று தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் 23 வது பிரிவிற்கு அமைவாக கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள் என அழைக்கப்படும்.

2 கிளைக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பதிவாளரால் பெயர் குறித்துரைக்கப்படும் உத்தியோகத்தர், கிளைப் பொதுச் சபையின் கூட்டத்தினை கூட்டுவதற்கான அதிகாரங்களைக் கொண்டவராக இருப்பர்.

3. கிளைகளின் உறுப்பினர் பட்டியலில் இருந்து 1992 ம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டத்தாலும், 1983 ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தாலும் திருத்தி அமைக்கப்பட்ட, 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க சட்டத்திற்கு அமைவாக தகுதியுடையோரை பொதுச்சபைக் கூட்டத்திற்கு அழைப்பு விடுப்பதற்கான மேலே 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அதிகாரத்தைப் கொண்டு இருப்பர்.

4 கிளைப்பொதுக் கூட்டத்திற்கான நிறைவெண், சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் 1/4 பங்கினர் அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அத்தொகையாகும்.

5. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்றத் தகுதி பெற்ற உறுப்பினர்களின் பட்டியலை அவ்வக் கிளைகளிலும், தலைமை அலுவலகத்திலும் காட்சிக்கு வைத்தல் வேண்டும்,

6. கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்களைக் கூட்டுவதற்கான கால அட்டவணைகள் பதிவாளரால் நிர்ணயிக்கப்படும்

7. பதிவாளரால் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் கிளைப் பொதுச் சபையினைக் கூட்டுவார் அவரே தவிசாளராகவும் இருப்பார்.

8 தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக் குழுவிற்கான 09 உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி சபையைக் கோருவார்.

9. சபையில் இருந்து கிடைக்கப் பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

10. தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர்சபையில் பிரகடனப்படுத்திய பின் சங்கச் செயலாளருக்கும் பதிவாளருக்கும் எழுத்தில் அறிவிக்க வேண்டும்

## அங்கத்தவர்களின்

[2ம் பக்கம் பார்க்க]

அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும்.

எமது சமாசத்தைப் பொறுத்த வரையில் அங்கத்துவசங்கங்களின் வளர்ச்சிக்குரிய தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்கியும் அங்கத்தவர்களின் எதிர்கால நன்மை கருதி ''விபத்து நலகொடைத் திட்டம்'' ''ஓய்வூதியம்'' ஆகியவற்றை அமுல படுத்தி வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

எனது இத்தகைய கருத்துக்களை ''ஐக்கிய தீபம்'' வாயிலாக கூட்டுறவாளருக்கு எடுத்துக் கூறமுன்வந்தமைக்கு எனது நன்றியை கூறிக் கொள்கின்றேன்.

## கூட்டுறவு சேவை

[2ம் பக்கத் தொடர்ச்சி]

போது அவர்களின் (தனியார்) நிலை தர்ம சங்கடமாகப் போய் விட்டது இதேபோல் தான் ஏனைய பொருட்களின் விலைகளும்.

கேள்வி; ஐக்கியதீபம் மூலமாக கூட்டுறவாளர்களுக்கு நீங்கள் கூறும் செய்தி என்ன?

பதில்: முதலாளி வர்க்கத்தின் சுரண்டல்களில் இருந்து ஏழை, எழியவர்களை தொழிலாளர்களை விடுவிக்கும் வகையில் உருவான கூட்டுறவு இயக்கத்தினை, அதில் இணைந்து சேவை செய்பவர்கள் ''சுரண்டல்'' களில் ஈடுபடாது சேவையினைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்பட வேண்டும் கூட்டுறவுக்குள் கூட்டுறவை யதார்தமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

கூட்டுறவின் புனிதத்தன்மைக்குமாசு கற்பிக்கும் வகையில் செயற்படாது எமது கூட்டுறவுமுன்னோடிகளான அமரர் வி.வீரசிங்கம்,அமரர்வ.பொன்னம்பலம் போன்றோரின் கூட்டுறவு வழியில் கூட்டுறவிற்காக உழைக்க வேண்டும் இதனையே ஐக்கியதீபம் மூலமாக கூட்டுறவாளர்களுக்கு நான் விடுவிக்கும் செய்தியாகும்.

### நியமனம்

வேலணை பல நோ கூ சங்க இயக்குநர்களாக திரு. செ. சிவலோகநாதன் (தலைவர்) திரு. தி.இராஜேஸ்வரன் திரு. செ சுப்பிரமணியம் ஆகியோர் க. அ. ஆணையாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்

## ஐக்கியம் ஒரு

4-ம் பக்கத தொடர்ச்சி

லைப்பரப்பினுள் சிறந்தமுறையில மேற்கொண்டு வருவதுடன் ஒபபந்த வேலைகள் முகவர் சேவைகள போன்ற பல்வேறுபட்ட முயற்சிகளிலும் சங்கம் ஈடுபட்டுள்ளது.

சங்கத்தின் பல்வேறு மட்டங்களிலும் ஐக்கியம் பேணப்பட்டு வருவதனால் சங்கம் மக்கள் சேவையுடன் இலாபகரமாக இயங்கி மூன்று பல லட்சக்கணக்கான ரூபா செலவில் [சொந்த நிதியில்] திருமலை நகரின் பிரதான வீதியில் கேந்திர முக்கியத்துவம வாய்ந்த இடத்தில் இருமாடிகளைக் கொண்ட மாதிரி கடைத்தொகுதிஒன்றை அமைதுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்கடைத்தொகுதி செயற்பட ஆரம்பித்ததும் தனியார் துறையினருடன் போட்டி கூட்டு வர்த்தக நடவடிக்கைகள் முடுக்கிவிடப்படும்.

சங்கத்தில் ஊழியர்கள்மத்தியில்இயக்குநர்களுக்குமத்தியில் பிணக்குகய இலலை குரோதங்கள் இல்லை. இதமகுமாறாக இவர்களுக்கிடையே பரஸ்பரபுரிந்துணர்வு நிலவி வருவதால் மக்களுக்குரிய சேவைகளை திறம்பட ஆற்றி வருடாவருடம் சங்கம் இலாபகரமாக இயங்கி உறுப்பினர்களுக்கு பங்குக்குமட்டான வட்டியும், ஆதரவிறகேற்ற தள்ளுபடியும், ஊழியர்மிகை ஊதியமும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டுகிறது.

இத்தனைக்கும் சங்கம் சிறந்த குறிக்கோளுடன் மனித, பௌதீக வளங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப்படுவதும், அதற்கு உறுதுணையாக ''ஐக்கியம்'' அமைந்திருப்பதுமே இந்நிறுவனத்தின் வெற்றிப்பாதையின் இரகசியமாகும.

''ஒன்று படுவோர் வென்று விடுவர்'' இது நிச்சயம்.

## கூட்டுறவு சேவையாளன்

3-ம பக்கத் தொடர்ச்சி

கொள்ளவிடாது ஆண்டவன் திடீரென தனது நிழலடியில் ஆட்கொண்டு எம்மை எல்லாம துன்பதுயரங்களுக்கு ஆளாக்கிவிட்டான்.

சந்திரன் மறைந்தாலும் அவரது கூட்டுறவு சேவையும், அவரிடம் இருந்து பெற்ற கூட்டுறவு ஆலோசனைகளும், அறிவும் கூட்டுறவாளர்கள் நெஞ்சை விட்டகலாது என்பது நிச்சயம்

சக உத்தியோகத்தர்

# கௌரவிப்பு

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத்தில் 25 வருட சேவையைப் பூர்த்தி செய்த திருவாளர்கள் செ. செல்வராசா ஐ. சிங்கராசா ஆ. கதிர்காமதாசன் பொ. யோகலிங்கம் வ வல்லிபுரம் திருமதி சி செல்வரெத்தினம் திருமதி லோ. கனகரத்தினம ஆகியோருக்கு கூட்டுறவு ஆ, உ. ஆணையாளா திரு எஸ். கே சண்முகநாதன் தங்கப்பதக்கம சூட்டி கௌரவித்தார்.

# விற்பனை நிலையம்

அளவெட்டி மல்லாகம் பல நோ. கூ. சங்கம் அளவெட்டி, குழமங்கால் பகுதிகளில் மீளக் குடியமர்ந்த சுமார் 300 குடும்பங்களின் நன்மை கருதி புதியகிளை விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது.

★ ★

நெடுந்தீவு பலநோ. கூ சங்கம் 13ம், 14ம், 15ம் வட்டார மக்களின் வசதிகருதி, நெடுந்தீவு கிழக்குத் தீர்த்தக் கரைப்பகுதியில் நுகர்ச்சிக் கிளை ஒன்றை அண்மையில் திறந்துள்ளது.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் திரு. எஸ். என். இராமச்சந்திரன்இக்கிளையை திறந்து வைத்தார்.

## நேரடியாக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உ+ம் 350 குடும்பங்களை கொண்ட ஒரு சிறிய சங்கத்தில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் போது அவர்கள் நேரடியாக கூட்டங்களில்பங்குபற்றி நிர்வாகிகளை தெரிவு செய்யும் வகையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் (புதிய கிளைக்குழு தேர்தல் விதிகள் இதேபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமிய வங்கிகளை உள்ளடக்கிய கிராமிய வங்கிகளின் சமாசம் உருவாக்கப்பட்டு அச்சமாசத்தில் கிராமிய வங்கிகளின் சேமிப்புப் பணம் வைப்புச் செய்யப்பட்டு யாழ். மாவட்ட மக்களின் அபிவிருத்தித்தேவைகளுக்கு அப்பணம் பயன்படுத்தப்பட வேண்டும்.

தென்னிலங்கையில் இது போன்ற 13 கிராமிய வங்கிகளின் சமாசங்கள் அரசினதும், மக்கள் வங்கியினதும் பூரண ஆதரவுடன் இயங்கி வருகின்றன.

வடகிழக்கு மாகாணத்தில் உள்ள கிராமிய வங்கிகளினுல் மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட 319 மில்லியன் ரூபா சேமிப்புப் பணமும் அம்மாகாண மக்களின் அபிவிருத்தித் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படாமல் வர்த்தக நடவடிக்கைகளுக்கே மக்கள் வங்கியால் பயன்படுத்தப்படுகிறது.

எனவே வடகிழக்கு மாகாணத்தில் மாவட்ட மட்டத்தில் கிராமிய வங்கிகளின் சமாசங்கள் அவசியம் அமைக்கப்பட வேண்டும்,

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் நிலுவையிலுள்ள கணக்காய்வினை மேற் கொள்வதற்கு இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்கள்,சங்க உயர் மட்ட பணியாளர்களை உள்ளடக்கிய உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வுக்குழு ஒன்று நியமிக்கப் பட்டுளளது.

இக்கணக்காய்வுக் குழுவின் வேலைகளை யாழ். மாவட்ட கூட்டுறவு சபை விரிவுபடுத்தி இந்த குழுவின் நடவடிக்கைகளை தொடர்புபடுத்தி அதன் இணைப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ் மாவட்ட புனரமைப்பு தாடர்பாக கூட்டுறவுச் சங்கங்கள் அனுப்பி வைத்துள்ள கருத்திட்ட அறிக்கைகள வடகிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள திட்டமிடல பிரிவினால் ஆய்வு செய்யப்பட்டு சாத்தியமான பல திட்டங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன

கால்நடை உற்பத்தி விவசாயம், பனம்பொருள் உற்பத்தி, கைத்தொழில சேவை நோக்குத் திட்டங்கள் என இவை வகுக்கப்பட்டு அவற்றுக்கு முக்கியத்துவம அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவு பணியாளர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் ஒன்று தயாரிக்கத் பட்டு அதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இப்புதியசம்பளத் திட்டம் வெகு விரைவில் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும். என்று இப்பேட்டியின்போது ஆணையாளர் கூறினார்.

### உழவு சேவை

பண்டத்தரிப்பு பல, நோ. கூ. சங்கம் உழவு இயந்திரம் ஒன்றை விவசாயிகளின் விவசாயத் தேவைகளுக்கு குறைந்த கட்டணத்தில் சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யா. மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டு வீதி மா. கூ. சபையினரால் செப்ரெம்பர் மாதம் வெளியிடப்பட்டது.